ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

2022.12.28

எமது தொடர்பு: 33/04/012/0012/005

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்**

**ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா உடன் செலாவணி வீதத்தின் நடு வீதமும் மாறுபாட்டு எல்லையும் - 2022.12.28**

2022.05.12 அன்று வழங்கப்பட்ட செலாவணி வீதத்தின் ஒரு நாளுக்குள்ளேயான தளம்பலை முகாமை செய்வதன் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் இது தொடர்புடையது (எமது தொடர்பு: 33/04/012/0012/004).

அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும், (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) **2022.12.28** அன்று ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களின் நடு உடன் செலாவணி வீதமாக **ரூ.363.13** பெறுமதியினையும் மற்றும் நடு உடன் செலாவணி வீதத்தின் இரு பக்கம் மீதும் (+/-) ரூ.2.60 கொண்ட மாறுபாட்டு எல்லையையும் பயன்படுத்துமாறு வேண்டப்படுகின்றன.

இலங்கை ரூபாவிற்கெதிரான வேறு நாணயக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைய வீதங்களும் மேலே ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா நடு உடன் செலாவணி வீதம் மற்றும் மாறுபாட்டு எல்லை என்பவற்றின் அடிப்படையில் கணிக்கப்படவேண்டும்.

***ஒப்பம்/*** **முனைவர் பி. நந்தலால் வீரசிங்க**

ஆளுநர்

இலங்கை மத்திய வங்கி